1978 மார்ச் 4]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாயூரம் ஒன்றியம் கொற்கை பஞ்சாயத்தையும், தாழஞ்சேரி பஞ்சாயத்தையும் இணைக்க ஐயாவையனாற்றுக்குக் குறுக்கே இந்தப் பாலம் நீண்ட காலமாகக் கட்டப்படாமல் பல துறைகள், பொதுப்பணித் துறையிலே கட்ட வேண்டும் அல்லது நெடுஞ்சாலைத்துறை கட்ட வேண்டும், அல்லது ஊராட்சி ஒன்றியம் கட்ட வேண்டும் என்று எதுவுமே முடிவு செய்யப்படாமல் தவியாய் தவித்து, இப்பொழுது நெடுஞ்சாலைத் துறை கட்டியிருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். இந்த நெடுஞ்சாலைத் துறை மூலமாகவாவது விரைவில் அந்தப் பாலத்தைக் கட்ட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நெடுஞ்சாலைத் துறை கட்ட இருப்பதாக நான் சொல்லவில்லை. சென்னை தலைமைப் பொறியாளரின் (நெடுஞ்சாலை) தொழில் நுட்ப அனுமதி கிடைத்த பிறகு ஊரக வளர்ச்சி இயக்குநர் இந்தப் பணி குறித்து நிர்வாக அனுமதி வழங்குவார்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பல ஆண்டுக் காலமாக இந்த வேலை முடிக்கப்படாமல் இருந்து வருகிறது. அந்தப் பாலத்திற்குப் பல நேரங்களில் டெண்டர் கால்பார் செய்தும் ஒப்பந்தப் புள்ளி கோர யாரும் முன் வர மறுக்கிறார்கள். எப்படியாவது அந்தப் பாலத்தை எந்த வகையிலேனும் கட்டி முடிக்க அரசு ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, ஆவன செய்யும்.

மதுரையில் குடிநீர் பற்றாக்குறை.

*வினா 391—திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் ; மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதுரையில் குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS